# 19 குருலிங்க சங்கம வழிபாடு

சைவ நெறி, ஆன்ம விடுதலைக்கான பல மார்க்கங்களைக் குறிப்பிடுகின்றது. அவற்றுள் குரு லிங்க சங்கம வழிபாடும் ஒன்றாகும். குரு, இலிங்க, சங்கமங்களை வழிபடுதல், போதித்தல், மதிப்பளித்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இறைவன் அடியாரது வழிபாட்டை தந்தருள்வார். நாம் சிவனை எமக்கு இசைந்த அல்லது இயைபான வடிவங்களினூடாக வழிபடலாம். சிவனடியார் முதலியோருக்குச் செய்யும் சேவையும், அளிக்கும் மதிப்பும் இறைவழிபாடு சார்ந்தவை என்பதையே இவ்வழிபாடு குறிப்பிடுகின்றது.

## 1. குரு வழிபாடு

சைவ சமய சாத்திரங்களைப் போதிப்பவர், சமயாசாரக் கிரியைகளைச் செய்பவர், ஆன்மீகத்துறையில் சந்தேகங்களைப் போக்கி நல்வழிப்படுத்தும் வழிகாட்டியாகவும் விளங்குபவர் குரு ஆவார். இவர்களை மனிதரெனக் கருதாது சிவன் எனவே கருத வேண்டும். குரு என்றால் அஞ்ஞானத்தைப் போக்குபவர் அல்லது பாசத்தை நீக்குபவர் என்பது பொருள்.

சிவபெருமான் பிறவித் துன்பத்தை நீக்கவே குருவாக எழுந்தருளுகின்றார். இதனைத் திருவருட் பயன் பாடல் தெளிவாக விளக்குகின்றது.

'பார்வைஎன மாக்களைமுன் பற்றிப்பிடித்தற்காம்
போர்வை எனக்காணார் புவி''

பழக்கப்பட்ட மிருகத்தின் உதவியுடன் அதே இனத்து மிருகத்தைப் பிடிப்பர். அதே போலச் சிவன் எம்மை ஆட்கொள்ள மானிடத் திருமேனி தாங்கி வருகின்றார். சற்குருவானவர் இது நன்னெறி இது தீயநெறி என்று உணத்துபவர். எனவே இவரை சிவன் எனக் கருதி மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும் வழிபடல் வேண்டும். சகலரும் குருவை வழிபடல் மேலானதாகும். குரு வழிபாட்டின் மூலம், திருமூலர், மங்கையற்கரசியார், குலச்சிறையார், அப்பூதியடிகள் ஆகியோர் வீடுபேறு அடைந்தோரில் சிலராவர். குருவை உள்ளன்போடு வழபடுவதுடன் சமய குரவர், சந்தான குரவர் முதலியோரது குருபூசைத் தினங்களைக் கொண்டாடுதலும் அவசியமாகும்.



## 2. இலிங்க வழிபாடு

ஆன்மாக்களும் உலகமும் ஒடுங்குவதற்கும் தோன்றுவதற்கும் இடமாயுள்ளது லிங்கம் ஆகும். லி-ஒடுங்குதல், கம்-தோன்றுதல் எனவும் பொருள்படும். திருக்கோயில்களுள் காணப்படும் விக்கிரகங்களுள் சிவலிங்கமே முதன்மையானது.



சிவலிங்கத்தின் அடிப்பாகத்தில் உடுக்குப் போன்ற பீடத்திற்கு ஆவுடையார் என்று பெயர். அதன் மேற்பாகத்தில் உருண்டு நீண்ட முனையற்ற தண்டு ஒன்று உண்டு. அதற்குப் பாணம் அல்லது லிங்கம் என்று பெயர்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு மார்க்கத்திலுள்ளவர்களும் சிவலிங்கத்தை அவரவர் பக்குவத்திற்கு ஏற்ப வழிபடுவர். நாயன் மாருள் சேரமான் பெருமாள், சாக்கிய நாயனார், கலிங்காமர், பூசலார் முதலானோர் இலிங்க வழிபாடு செய்து வீடுபேறு அடைந்தவர்கள் எனக் கூறலாம்.

சிவலிங்கம் பரார்த்தலிங்கம், இட்ட லிங்கம் என இரு வகைப்படும். பரார்த்த லிங்கம், தாவரலிங்கம் எனவும் அழைக்கப்படும். இது ஐந்து வகையாகப்படும். சுயம்புலிங்கம், காணலிங்கம், தைவிகலிங்கம், ஆரிடலிங்கம், மானுடலிங்கம் எனப்படும்.

## 3.சங்கம வழிபாடு

சிவனடியார் திருக் கூட்டம் சங்கமம் எனப்படும். சிவபெருமானிடம் மெய்யன்பு பூண்டொழுகுவோர் சிவனடியார் ஆவர். சிவபெருமானை நினைத்தலும், அவரைப் பற்றிக் கேட்டலும், திருத்தொண்டு புரிந்தும், அவரது புகழ் பாடியும், திருவைந்தெழுத்தை ஓதியும் இன்புறுவர். அடியார்க்குரிய பாவனை செயல் வேடம் இவற்றையுடைய எவரும் சிவமாகக் கருதி வழிபடுவதற்குரியவராவர். நாயன்மாருள் திருநீலகண்டர், இயற்பகையார், சிறுத்தொண்டர், இளையான்குடிமாறனார். முதலயோர் சிவனடியார்களை வழிபட்டு வீடுபேறு பெற்றவர்களாவர்.

## சங்கம வழிபாட்டின் சிறப்பு

''அடியார் நடுவுளிருக்கும் அருளைப் புரியாய்''



என்று மணிவாசகப் பெருமான் வேண்டுகின்றார் ''ஆவுயித்துத் தின்றழலும் புலையரேனுங் கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே'' என்கிறார். அப்பர் சிவனடியார் வழிபாடு எமது உள்ளத்திலுள்ள கீழ்த்தர எண்ணங்களை அகற்ற உயர்தர எண்ணங்களை உண்டாக்குகின்றது. உலகப் பற்றை நீக்கித் தெய்வப் பற்றை வளர்க்கின்றது. சிவனடியார்களுக்குச் செய்யும் திருத்தொண்டும் வழிபாடும். உள்ளத்தை விரைவில் தூய்மைப்படுத்திப் பக்தியையும் வைராக்கியத்தையும் வளர்க்க உதவுகின்றன.

## பயிற்சிகள்

1. குரு என்பதன் பொருள் என்ன?
2. சிவம் எமை ஆட்கொள்ள எவ்வடிவில் வருகின்றார்?
3. இலிங்கம் என்பதன் பொருள் என்ன?
4. சிவலிங்கத்தின் இரு வகைகளையும் குறிப்பிடுங்கள்
5. சங்கமம் என்பது யாரைக் குறிக்கும்?
6. "ஆவுரித்தின்றுழலும்..." எனும் வரியின் பொருளை உமது நடையில் எழுதுங்கள்.

## செயற்பாடு

★ சங்கம வழிபாட்டில் ஈடுபட்டு முத்தியடைந்த நாயன்மார்களின் வாழ்க்கைக் குறிப்புக்களை ஒன்று திரட்டி வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.

## பாடச்சுருக்கம்

★ ஆன்ம விடுதலைக்கு பல மார்க்கங்களை இந்து சமயம் குறிப்பிடுகின்றது.

★ அவற்றுள் குரு, இலிங்க, சங்கம வழிபாடு முக்கியமானதாகும்.

★ ஆன்மாக்களின் அஞ்ஞானத்தைப் போக்குபவர் குரு ஆவார்.

★ ஆன்மாக்களின் பிறவித்துன்பத்தை நீக்கி சிவபெருமான் குரு வடிவில் எழுந்தருளுகின்றார்.

★ உலகம் தோன்றுவதற்கும் ஒடுங்குவதற்கும் இடமாயுள்ளது லிங்கம் ஆகும்.

★ சிவலிங்கம் பரார்த்த லிங்கம், இட்டலிங்கம் என இரு வகைப்படும்.

★ சிவபெருமானிடத்தில் மெய்யன்பு பூண்டு ஒழுகும் சிவனடியார் கூட்டம் சங்கமம் எனப்படும்.

★ சிவனடியார்களை சிவனாகப் பாவித்து வழிபட்டு முத்தியடைந்தோர்களுள் திருநீலகண்டர், இயற்பகையார், சிறுத்தொண்டர், இளையான்குடிமாறன் ஆகியோர் முக்கியமானவர்கள்.

★ சிவனடியார்களுக்குச் செய்யும் திருத்தொண்டு அவர்களின் உள்ளத்தையும் உடம்பையும் தூய்மைப்படுத்துகின்றது.